[1973 ஏப்ரல் 3

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அந்தக் கம்மியர் என்னென்ன தகுதிகள் பெற்றிருக்க வேண்டுமென்று அரசு வரையறுக்கக் கருதியுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கும் முழுத்தகுதி பெறாத இளநிலை முதுநிலை மெக்கானிக்குகளில் மூன்று பள்ளி ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் பணியாற்றியுள்ளவர்களை கோடை விடுமுறைகளில் பணியிலிருந்து நீக்காமல் பணியில் தொடர்ந்து இருந்து வர அனுமதிக்கும்படியும், மற்றவர்களை வழக்கம் போல் பள்ளி ஆண்டு முடிந்தபின் தற்காலிகமாக நீக்கிவிடலாம் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

(உ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

Headmasters of Aided Secondary Schools

* 334 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether G.O. Ms. No. 2033, dated 24th September 1960 and G.O. Ms. No. 1858, dated 20th November 1967, of the Education Department provide for a higher scale of pay for Headmasters of aided Secondary Schools under private management in which there are more than 25 sections;

(*b*) if so, whether this higher scale of pay has been allowed to all the Headmasters of such schools in Kanyakumari district; and

(*c*) if not, the reasons therefor?

மானியம் பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்

திரு. எம். ராஜா அய்யர் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையில் 24—9—1960 ஆம் நாளன்று பிறந்த 2033 ஆம் எண் அரசாணையும், 20—11—1967 ஆம் நாளன்று பிறந்த 1858 ஆம் எண் அரசாணையும் 25 வகுப்புப் பிரிவுகளுக்கும் அதிகமாகவுள்ள, மானியம் பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு உயர்சம்பள விதத்துக்கு வகை செய்கின்றனவா?

1973 ஏப்ரல் 3]

(இ) ஆமெனில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இத்தகைய பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் இந்த உயர்வித சம்பளம் அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) மாற்றலாகியுள்ள பகுதிகளில், தனியார் உயர்நிலைப் பள்ளித் திட்டத்தின் கீழ் மானியம் பெறும் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு 1960-க்கு முன்பு கொடுக்கப்பட்ட சம்பள விதமும், அரசுப் பணியில் இதற்கு நிகரான பதவிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கிய சம்பள விதமும் ஒரே மாதிரியாக இருந்தன. ஆகவே, மாற்றலாகியுள்ள பகுதிகளில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1—6—60-லிருந்து முடிவு செய்து திருத்தியமைக்கப்பட்ட சம்பளத்தை அதே பகுதியில் தனியார் துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்குவதென ஏற்றுக்கொண்டது. இத் திருத்தச் சம்பள விதம் மானியம் பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் பொருந்தும்படிச் செய்யவில்லை.

Urdu Language Teachers

* 335 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of Urdu Language Teachers serving in the High Schools in our State ; and

(*b*) the number of such Pandits who enjoy Grade I scale of salary ?

உருது மொழி ஆசிரியர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நம் மாநிலத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உருது மொழி ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) அத்தகைய பண்டிதர்களில் எத்தனை பேர் தரம் I-க்கான சம்பள விதம் பெறுகின்றனர் ?